புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திட்டூர் தேசிகரின் பாடல்களில் விளிம்பு நிலை சிந்தனைகள்

பொ. ஆன்சிலின் ஜூலியட்
பதிவு எண் : 22113114021010
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் - 629165 .

முனைவர் சு.சு. ஷீபா,
நெறியாளர் & உதவிப்பேராசிரியர்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் - 629165
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

ஆய்வுச் சுருக்கம்

உலக வரலாற்றை மாற்றியமைப்பதில் இலக்கியங்கள் மிகவும் சக்தி வாய்ந்த கருவியாக செயல்படுகின்றன. அறிவியல் துறைகள் மனிதனின் மூளைக்கு வேலை கொடுக்க, இலக்கிய துறைகள் மனிதனின் மூளையோடு மனதிற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. அந்த வகையில் திட்டூர் தேசிகரின் நூல்கள் யாவும் ஏதேனும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை மக்களுக்கு விளக்கக்கூடிய வகையிலேயே அமைகின்றன. அந்த காலகட்டத்தில் மக்கள் சுரண்டலுக்கும் இழிவுகளுக்கும் உட்படுத்தப்பட்டு உயர் ஜாதிக்காரர்களால் அடிமைப்படுத்தப்பட்டு சமூக கலாச்சார பொருளாதார அரசியல் உரிமைகள் அவர்கள் அறியாதவைகள் ஆயின. தென் திருவிதாங்கூரில் ஆளும் வர்க்கத்தினர் மற்றும் அவர்களை சார்ந்திருந்த உயர் ஜாதியினர் பெரும்பான்மையினமாகவும், அதே வேளையில் ஜாதிய ரீதியில் தாழ்ந்தவர்களாகவும், ஒடுக்கப்பட்டவர்களாகவும் கருதப்பட்ட சமுதாயத்து மக்கள் அனுபவித்த கொடுமைகளை வேதனைகளை, அவலங்களை தம் பாடல்கள் மூலம் எடுத்துக் கூறியவர் திட்டூர் தேசிகரே. தம் பாடல்கள் மூலம் விளிம்பு நிலை சிந்தனைகளை பிற மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என பல பாடல்களை எழுதியுள்ளார். இதன் மூலம் இவர் அத்தகைய அடிமை நிலைகள் மாறி, மக்கள் சுந்திர காற்றை சுவாசிக்க பெரிதும் உதவினார். இத்தனை அவலங்களையும், கொடுமைகளையும், உரிமை மீறல்களையும் மீறி, இன்று நாடார் இன மக்களும், ஈழவர்களும் மற்றவர்களும் முன்னேறி இருக்கின்றனர். ஏனைய ஒடுக்கப்பட்டோரின் விடுதலையை நம் விடுதலையாய் உணரவும், இத்தகைய பாடல்கள் நமக்கு துணை புரிவதை நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.

## முன்னுரை

குமரி மாவட்டம் தோவாளை தாலுகா, திட்டுவிளை என்ற ஊரில் வாழ்ந்த ஈஸ்வர பாக்கியம் என்பவர் தனது 20 வயது தொடங்கி 74 வயது வரை 300க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்து கிறிஸ்தவ இலக்கியத்திற்கு அரும் பங்காற்றி இருக்கிறார். ஏட்டில் எழுதப்படும் காலத்துக்கு முன்பே ஓலைச்சுவடிகளில் அவர் எழுதி வைத்ததால் உரிய முறையில் பாதுகாக்கப்படாமல் பல அழிந்தன. சில அச்சேறி இன்றும் வாழ்கின்றன. இவர் திட்டுர் தேசிகர் என்று அழைக்கப்படுகிறார். நாகர்கோயில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறை தலைவர் த. ஏசுதாஸ் அவர்களின் அரும்பெரும் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட தேசிகரின் ‘மெய்ஞான மாலை’ `என்ற நூலை 1968 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர், மோசஸ் பொன்னையா அவர்கள் வெளியிட்ட பிறகே தமிழுலகில் இந்த கிறிஸ்தவக் கவிஞர் அறியப்பட்டார். இவரது பாடல்களில் விளிம்பு நிலை சிந்தனைகள் குறித்து ஆய்கிறது இந்தக் கட்டுரை.

*திட்டூர் தேசிகரின் வாழ்க்கைக் குறிப்பு*

*குமரி மாவட்டம் திட்டுவிளை என்னும் ஊரில் 1858 ஆம் ஆண்டு பிறந்தவர் திட்டூர் தேசிகர். இவரது தந்தை பெயர் ராமன், தாயார் இசக்கி. 1863 ஆம் ஆண்டு தமது ஐந்தாம் வயது முதல் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ்க் கல்வி கற்றார். சிறுவன் ஈஸ்வர வடிவிற்கு நூல்கள் படிப்பது மிகவும் பிடிக்கும். நற்செய்தியாளர் லூக்கா எழுதிய நூலை வாங்கிப் படித்த ஈஸ்வர வடிவு அதில் உள்ள கருத்துக்களை முழுமையாக புரிந்து கொள்ள முடியாததால், திட்டுவிளை சபை போதகரின் உதவியால் நூலில் உள்ள செய்திகளை அறிந்து கொண்டார். 14ஆவது வயதில் கிறிஸ்தவனாக மாறினார். 18ஆவது வயதில் திருச்சபையின் முழு உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டார். 1873 ஆம் ஆண்டு ஆசிரியராகப் பொறுப்பேற்றார். இவரது மாதச் சம்பளம் ஐந்து ரூபாய், அதில் பாதிப் பணத்தை புத்தகங்கள் வாங்க செலவிடுவார். 1892 ஆம் ஆண்டு இவருக்கு தேசிகர் என பட்டம் வழங்கப்பட்டது. திட்டூர் தேசிகர் எழுதிய நூல்களை குறித்து பேசும் ஞானராபின்சன், "இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தமிழ் கிறிஸ்தவ புலவர்களில் அதிக நூல்களை எழுதி பல வருடங்கள் எல். எம். எஸ். திருச்சபையில் நற்பணி செய்த பெரியார் தேசிகர், 1881 முதல் 1932 வரை எழுதினார். வேதாந்தம் என்ற தலைப்பில் 92 நூல்களையும் எழுதியுள்ளார். 36 மருத்துவ நூல்களும் எழுதி இருக்கிறார்" (ஞானராபின்சன், தமிழ் கிறிஸ்தவ மரபு, பக்கம் 32) என்கிறார். ஜாதி ஆதிக்கம் தலைவிரித்தாடிய காலத்தில், தனக்கும் தன் போன்றவர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து எழுதியவர் திட்டூர் தேசிகர். லண்டன் மிஷன் சபையில் தன்னை இணைத்து செயல்பட்ட இவர் ஒரு பாடலில்,*

*"தென் திருவிதாங்கூரில்*
*ஆதி சிறுமைப்பட்ட எங்களுக்கும்*
*அன்பாக நன்மை செய்த*
*அருமை லண்டன் மிசியோன் வாழி"*

*(சகாப்த கொண்டாட்டம், பாடல் 95)*

*என்றெழுதும் போது அதிசிறுமைப்பட்ட என்ற பதத்தை கையாளுகிறார்.*
*நால்வருண பேதத்தைக் கடுமையாகத் தனது பாடல்கள் வழி சாடிய தேசிகர் அன்றே ஆட்சியாளர்களின் கொடுமையான வரி விதிப்பையும், ஒடுக்கப்பட்டவர்கள் மீது நடத்திய தாக்குதல்களையும், விளிம்பு நிலை மாந்தர்கள் பற்றிய சிந்தனைகளையும், தம் நூல்களில் எழுதியுள்ளார். திட்டூர் தேசிகர் எழுதிய பல நூல்கள் இன்னமும் கிடைக்கவில்லை. இவ்வாறு பல நூல்கள் எழுதிய கிறிஸ்தவக் கவிஞர் 1932 மே 14 அன்று தனது 74 ஆவது வயதில் காலமானார்.*

*தேசிகரின் பாடல்களில் விளிம்பு நிலை சிந்தனைகள்*

*திட்டூர் தேசிகர் மெய்ஞான மரபையும், விடுதலைப் போராட்டத்தையும் முன்னெடுத்தவர் தனது 'கீதமாலிகை' நூலில்,*

*"பஞ்சமன் படித்தக்கால் பண்டிதனா கானோ?*
*படியாவிடில் ஏனையன் நிர்மூடனா கானோ?*
*உயரக்கூடாத சாதி உண்டோ உலகில் கூறு*
*ஒழுக்கம் இல்லாத சாதி உயராதென்பதை தேறு"*

*(கீத மாலிகை, 33)*

*என்பதிலிருந்து பஞ்சமர்கள் படித்தது உயர வேண்டும் என்பதை, உயரக்கூடாத சாதி உலகில் எதுவும் இல்லை என்பதன் வாயிலாக காட்டுகிறார். இவரது பாடல்களில் வெளிப்படும் விளிம்பு நிலை மற்றும் விளிம்பு நிலை சிந்தனைகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.*

i) *விதவைகள்*

ii) *தேவதாசிகள்*

iii) *அடிமைகள்*

iv) *சாதி பேதம்*

v) *பார்ப்பன எதிர்ப்பு*

*இவ்வாறாக விளிம்பு நிலையினரை தம் பாடல்களில் இவர் கூறுவதைக் காண முடிகிறது.*

**i**) *விதவைகள்*

*விதவைகளின் உருவாக்கத்திற்கு காரணம் இந்து சாஸ்திரங்கள் என்பது தேசிகரின் கருத்து. இதனை கூறும் விதமாக அவர் எழுதிய பாடல் ஒன்றில்,*

*"இந்து சாஸ்திர எருக்கிடங்கு*
*எங்கட் கென்றோ அமைந்தது?- ஈசுரா!"*

*(ஆனந்த கீதாகரம், பாடல் 278: 27)*

*என்று விதவைப் பெண்ணொருத்தி கேட்பது போல எழுதியுள்ளார். விதவைகளை அகதியாகப் பார்க்கிறார் திட்டூர் தேசிகர்.*

*"அகதி விதவைகளை*
*ஆதரிக்கும் கையால்*
*சக்தி தருவாய்*
*சுந்தர யேசுகிறிஸ்து"*

*(இயேசு கிறிஸ்து கண்ணி, பாடல் 71)*

*என்று விதவைப் போட்ட இரண்டு காசுகளைப் பெரிதெனக் கூறிய இயேசுவிடம் சக்தியைக் கேட்பது போலப் பாடியுள்ளார்.*

**ii**) *தேவதாசிகள்*

*விளிம்பு நிலை மக்களில் விதவைகளை அகதிகளாகப் பார்த்த பார்வையோடு சமூகத்தில் அப்பாவிப் பெண்களை தேவதாசிகளாக மாற்றும் கொடுமையை எதிர்த்தும் அவர் எழுதியிருக்கிறார்.*

*"சாமிக்குத் தாரமென்று*
*நேமித்தவனைக் கூடி*
*பூமியைச் சாபமாக்கும்*
*காமிகள் கையைக் கட்டி"*

*(ஆனந்த கீதாகரம், பாடல் -525: 27)*

*என்ற வரிகளில் கடவுளுக்கு மனைவி என்று கூறி பெண்ணை இழிவுபடுத்தும் காமம் பிடித்தவர்களின் செயலைக் கட்டி நிறுத்துமாறு கூறுகிறார்.*

**iii**) *அடிமைகள்*

*அன்றைய திருவிதாங்கூரில் அடிமைமுறை இருந்தது. ஆண்களும், பெண்களும் அடிமைகளாக விற்கப்பட்டனர். கொல்லம், இரணியல் போன்ற பகுதிகளில் அடிமைகளை விற்க சந்தைகள் இருந்தன. அதனைக் குறிப்பிடும் திட்டூர் தேசிகர்,*

*"அடிமைகளாய் விற்கப்பட்டே*
*அங்கலாய்த்தோம் சில பாகத்தார்*
*குடியிறை ஊழியங்களினால்*
*குடல் துடித்ததோம் மறுப்பாகத்தார்"*

*(சகாப்த கொண்டாட்டம், பாடல்- 63)*

*என்று குறிப்பிடுகிறார். இலவசமாக எந்த பயனும் இன்றி உழைக்க அடிமைகள் நிர்பந்திக்கப்பட்ட தகவலையும் அறிந்து கொள்கிறோம். அடிமைப்படுத்தப்பட்ட மக்களை மாட்டுக்குப் பதிலாக ஏரில் பூட்டி உழுத கொடுமைகளும் அன்றைய திருவிதாங்கூரில் நடந்தது. இது குறித்து,*

*"மாட்டோடும் ஏரில் பூட்டி*
*ஓ! ஜனங்களே!*
*மா பாவிகள் அடித்தார்களே*
*ஓ! ஜனங்களே!"*

*(ஆனந்த கீதாகரம், பாடல் -523: 8)*

*என்பதிலிருந்து அறியலாம்.*

**iv**) *ஜாதி பேதம்*

*ஜாதி பேதம் ஐந்து தொழில்களின் அடிப்படையில் ஏற்பட்டது என்ற கருத்தை ஆதரிக்கிறார் திட்டூர் தேசிகர். வேளாண்மை, விவசாயம், அரசாட்சி, குருத்துவம், இரத்தல் என்று அவற்றை வகைப்படுத்துகிறார்.*

*"பஞ்ச செய்கைத் தொடர்பினால்*
*படர்ந்த பேதம் அன்றியே*
*கொஞ்சமேனும் மனுக்களைக்*
*கூற வித்தியாசமே*
*தஞ்ச லிக்கக் கோயிலும்*
*அடைக்க ஞாய மேதுகாண்*
*சஞ்ச லப்ப டுத்துவோர்*
*ஜாதி பேதம் காண்பாரோ?"*

*(ஜாதி பேதபதிகம், பாடல் -5)*

*என்று ஜாதி பேதம் குறித்து எழுதுகிறார். ஜாதி வித்தியாசம் பாராட்டுபவரைப் பார்த்து,*

*"ஜாதி வித்தியாசம்' தலையரியும் சீபதியோ?*
*நீதி வித்தியாச நிலையிருப்பீர் செங்கதிரோ?"*

*(செல்லப் பிள்ளைத் தாலாட்டு, பா: 110)*

*என்று கேள்வி எழுப்புகிறார். கீழ்ச்சாதிகள் என்று அன்றைய திருவிதாங்கூரில் ஒதுக்கப்பட்ட சாதிகள் மீது 129 வரிகள் விதிக்கப்பட்டதை,*

*"சொல்லரிய நூற்றிருபத் தொன்பதூ ழியங்களினால்*
*அல்லலுற்றோம் கிருபைகொண்டோம் ஆண்டவனே நீக்கிவைத்தார்"*

*(சகாப்த கொண்டாட்டம், பா: 60)*

*என்றும்,*

*"தாலியாம் தலையிறையாம் தண்டனையும் சகியாமல்*
*ஓலமிட்டும் கேட்பாரில்லை ஒடுங்கினோம் பல்லாண்டுகளாய்"*

*(சகாப்த கொண்டாட்டம், பா: 97)*

*என்றும் சாதியின் பெயரால் நடந்த வரி விதிப்புகள் குறித்து எழுதுகிறார்.*

*v) பார்ப்பன எதிர்ப்பு*

*திட்டுதேசிகர் 'கீத மாலிகை' நூலில் 'பார்ப்பாரா வஞ்சக கண்டனம்' என்றொரு பகுதியை எழுதியிருக்கிறார். இந்நூலில் பார்ப்பன எதிர்ப்பு குறித்து எழுதியுள்ளார்.*

*"ஆதிப் பிரமனின்றே ஜாதி நான்குண்டாச்சாம்.*
*அதிலே இவர்தான் முகமதிலே தோன்றினராம்.*
*அரசர் தோளில் செட்டிமரபோ துடையில்*
*பாதம் அடிமையாய் வேளாளர் மிடியதுய்ப்*
*பிறந்தாரு என்றார் அதுநிசந் தானோ?"*

*(கீதமாலிமை, பா : 12)*

*என்பதில் அது நிசந்தானா? என்ற கேள்வியிலேயே இல்லை என்ற பதில் அடங்கி இருக்கிறது. கீதமாலிமை நூலில்,*

*"பாப்பார வஞ்சம் பெரியாரே*
*பாரீரோ கொஞ்சம்,*
*ஆர்க்கும் மறைவோ இந்தப் பார்க்குள்*
*அகத்தில் குதைக்கட்டி முகத்தில் காட்டும்நேயம்.*
*போர்க்குள் நம்மைமூட்டி ஊர்க்குள் அவர் உபாயம்*
*பொங்குஞ் சுயநலமே எங்கும் அவர்நியாயம்"*

*(கீதமாலிமை, பா : 12)*

*என்று பார்ப்பனர்களின் இயல்புகளைக் கூறி எதிர்க்கிறார்.*

தொகுப்புரை

*மனிதநேயம் உடைய திட்டூர் தேசிகர் கிறிஸ்தவத்தின் சாரத்தை உள்வாங்கி சமூகப் பிரச்சனைகளான ஜாதி பேதம், தேவதாசி முறை, விதவைகள், அடிமை முறை, பார்ப்பன எதிர்ப்பு இவற்றிற்கு எதிரான குரலை வெளிப்படுத்தினார். இவர் தம் பாடல்களில் இத்தகைய பிரச்சனைகள் குறித்து எழுதியதன் மூலம் பிறமக்களும் இவற்றைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. விதவைகளின் உருவாக்கத்திற்கு காரணமாய் இருந்த இந்து சாஸ்திரங்களை அளித்தும் காமம் பிடித்தவர்களின் செயல் திட்டங்களும், மேல் ஜாதி மக்களின் ஆதிக்கமும், பார்ப்பனர்களின் ஆதிக்கமும் முறையே அடையாளம் காணப்பட்டது. அவர்களின் விளிம்பு நிலை சிந்தனைகள் சமூகத்தினின்று முற்றிலும் களைய காரணமாய் இவரது பாடல்கள் நிற்கிறது என்பதை அறிய முடிகிறது.*

துணைநூற்பட்டியல்


1) *திட்டூர் தேசிகர், சகாப்த கொண்டாட்டம், திருமதி.டாக்டர் ஜாய் ஞானதாசன், E/0314 கே.பி.ரோடு, நாகர்கோவில், 1995.*
2) *ஞான ராபின்சன், தமிழ் கிறிஸ்தவ மரபு, தமிழ்நாடு இறையியல் கல்லூரி, அரசரடி, முதற்பதிப்பு ஜனவரி: 1985.*
3) *திட்டூர் தேசிகரின், கருணானந்த சாவளி கீதமாலிகை, ஜி. ஐசக் அருள்தாஸ், நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில், 2011.*
4) *கிறிஸ்தவக், கீர்த்தனைக் கவிஞர்கள், முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன், கீர்த்தனா பதிப்பகம், கிழக்குத் தாம்பரம், சென்னை, 2003.*
5) *செல்லப்பிள்ளை தாலாட்டு, இன்னாசி, மெர்ஜோவி பதிப்பகம், வளசரவாக்கம், சென்னை.*
6) *ஆனந்த கீதாகரம், கே. பி. ரோடு, நாகர்கோயில், முதற்பதிப்பு: ஜனவரி 1878.*
7) *இயேசு கிறிஸ்து கண்ணிகள், கே.பி.ரோடு, நாகர்கோவில்.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********